"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி - 2003





சிவஸ்கந்தகிரி முருகன்

-Croydon-

லண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

# GLOBAL ESTATE AGENTS LTD




We specialise in Selling / Letting properties, and have proved our services by selling a few properties in Your area within 2-3 weeks

We urgently require two to four bed properties around your area for serious buyers registered with us.

**Our charges are only 0.6% + VAT on No Sale No Fee Basis**

**Why not call us NOW for IMMEDIATE RESULTS and a FREE VALUATION**

Call us on

**020 8682 5100**

**233 Mitcham Road, Tooting SW17 9JG**

# GL Financial Services Ltd

*Total, Trusted, Mortgage Solutions...*

**Are you having problems in getting a Mortgage?**

* *Can't get the right Mortgage?* * *No Bank statements?*

* *No Proof of Income* * *Difficult credit history?*
(CCJ's, Defaults, Mortgage Arrears,...)

* *Selfemployed no accounts* * *Need to raise funds for business?*

* *Trying to bring all your financial commitments under one payment?*

**Whatever the problem, One call to GL Financial Services will heal your financial headache**

**We specialise in arranging**

* Mortgage for 1st Time Buyers * Buy - to - Let Mortgages * Let - to - Buy Mortgages

* Remortagages * Right to buy Mortgages * Commercial Mortgages * Commercial Loans

Life Assurance, Building & Contents Insurance

247 Mitcham Road, Tooting, SW17 9JQ

**tel : 020 8672 2333**

*Your home is at risk if you do not keep up repayments on mortgages or other loans secured on it*

மணி 10

# கலசம்
KALASAM

ஒலி 44

www.smsuk.org.uk
E-mail: kalasam@hotmail.com, kalasamsms@yahoo.co.uk

# மேற்கில் உதிக்கும் சைவம்

**இந்தியாவிலிருந்து மெய்ஞ்ஞானம் மேற்கு நாடுகளுக்குச் செல்லவேண்டும்; மேற்குலகின் விஞ்ஞானம் இந்தியாவிற்குக் கொண்டுவரப்படல் வேண்டும்** என்று 1894 ஆம் ஆண்டு கூறினார் சுவாமி விவேகானந்தர். அதற்கான வழிமுறைகளையும் அவர் உருவாக்கினார். அதன் பின் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்களுள் ஒரு புதிய அலையாக அண்மைக் காலங்களில் தோன்றிக்கொண்டிருக்கும் சைவ ஆலயங்களைக் குறிப்பிடலாம். இன்று இங்கிலாந்தில் மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட சைவ ஆலயங்கள் மிகக் குறுகிய காலத்தில் தோன்றியுள்ளன. எக்காரணம் பற்றி இவை தோன்றினாலும் இவற்றால் சைவ சமயம் ஒரு புதிய உத்வேகத்தை அடைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

கலி சூழ்ந்துவரும் இக்காலகட்டத்தில் அந்தக் கலிபுருஷனின் பாசறையாக விளங்குவது மேற்கத்தைய நாகரிகமே. விவேகானந்தர் விரும்பிய விஞ்ஞானத்துடன் ஒரு விளைபொருளாக அஞ்ஞானமும் இங்கிருந்துதான் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தொலைக்காட்சி மூலம் காமமும் வன்முறையும் ஒவ்வொரு வீட்டிலும் நுழைந்து களியாட்டம் செய்கின்றன. இவற்றின் மூலம் சிறிது சிறிதாக மனித மனங்களும் அதன் மூலம் எமது கலாசாரமும் சிதைக்கப்படுகின்றது. இந்நிலையைத் தமிழ் நாட்டிலும் ஏன், எமது தாய் நாட்டிலும் கண்கூடாகக் காண்கின்றோம். இந்தச் சிதைவைத் தடுத்து ஆன்மிகத்தை நிலைநிறுத்த பகைவனாகிய கலியின் பாசறையாகிய இந்நாடுகளிலே ஆலயங்களின் தேவை மிக அவசியமானதே.

அதே சமயம் மக்களுக்கு, குறிப்பாக இளைய சமுதாயத்திற்கு ஆலயங்களின் பொறுப்பும் இந்நாட்டில் மிக அதிகமானது. ஆலயங்கள் வெறும் கட்டிடங்களுடனும் திருவிழாக்களுடனும் நின்றுவிடக்கூடாது. மூட நம்பிக்கைகள் முடிந்த வரை களையப்படவேண்டும். சடங்குகளின் அர்த்தங்கள் எடுத்துரைக்கப்பட வேண்டும். இலவச சமயவகுப்புக்கள் நடத்தப்படவேண்டும். இறைவன் என்றும் புதியவன். அதனால் சடங்குகள் காலம் இடம் கருதி மாற்றம் பெறுவது தவறல்ல. இங்கு பிறந்த இளையவர்கள் எத்தனை பேர் சுயமாக ஆலயத்திற்கு வருகிறார்கள்? தமிழ் மொழி இவர்களிடம் குற்றுயிராகக் கிடக்கிறது. சமயத்திற்கும் இந்த நிலை வராமலிருக்கக் கடும் முயற்சி எடுக்கவேண்டிய பெரும் பொறுப்பு எமது ஆலயங்களுக்கும் ஏனைய சைவ நிறுவனங்களுக்கும் உண்டு. எமது சமயம் காட்டும் வழி தெளிவானதாகவும், இன்றைய மக்களின் தேவையைப் புரிந்து கொண்டு பூர்த்தி செய்யக்கூடியதாகவும் இருந்தால் மதமாற்றம் பற்றி அஞ்ச வேண்டிய அவசியம் இருக்காது.

தாயகத்து வறியோருக்கு உதவும் சீரிய பணியைப் பல ஆலயங்கள் தற்போது முன்னெடுப்பது தலை வணங்கப் படவேண்டிய செயல். அதே சமயம் புதிய உத்திகளைக் கையாண்டு இங்கு பிறந்த இளையோரையும் ஏன், பிற இனத்தவரையும் கூடக் கவரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எமது ஆலயங்களை வருங்காலத் தலைமுறை பெருமையுடன் ஏற்றுப் பராமரிக்கும் வகையில் அவர்களைத் தயார்ப்படுத்த வேண்டியது நம் அனைவருடைய கடமையும் ஆகும். ■

**நிர்வாகக் குழு**

திரு.சி.அற்புதானந்தன், திரு.சிவ.அசோகன், திரு.சி. தம்பு, திரு.சு.வைத்தியநாதன், திரு.வ.இ.இராமநாதன், திரு. ந. நவநீதராசா, திரு.ந.சிவராசன், திரு.செ..தர்மலிங்கம், திரு.ச.யோகநாதன், திரு.ஸ்ரீரங்கன், திருமதி.சி.தமிழரசி

**தொடர்பு முகவரி:** 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# சிவஸ்கந்தகிரி

# அருள்மிகு முருகன் திருக்கோயில்

13-15 Thornton Road, Thornton Heath, Croydon, Surrey CR6 BD U.K

**Tel No: 020 8684 0747**

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றார் ஔவையார். சைவ சமயத்திலே ஆன்மாக்கள் உய்வு பெறுவதற்கு ஆலயம் ஒரு சிறந்த சாதனமாக அமைகின்றது. மனதினை ஒரு நிலைப் படுத்தி அதனில் இறைவனின் உன்னத உருவினைக் கண்டு களிக்க நிரம்பப் பயிற்சி தேவை. அதே இறைவனின் உருவினைப் பலவடிவங்களில் கண்டு கண் களிக்க, ஆலயத்தில் ஓதப்படும் மந்திரங்கள் தேவார இன்னிசையைக் கேட்டு செவி களிக்க, அங்கே ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்யப்படுகின்ற வாசனாதி திரவியங்களின் நறுமணத்தால் நாசி களிக்க, இவை அனைத்தின் மூலமும் மனதிற்கு ஒரு அலாதி சந்தோஷம் கிடைக்கின்றபொழுது இறைவனின் அருளினைப் பெறுவதில் பக்தனுக்கு அந்த இடத்தில் சிரமம் ஏதும் ஏற்படுவதில்லை. ஆதனால் தான் நமது முன்னோர்கள் கிராமங்கள் தோறும் ஆலயங்களை அமைத்து அதன் மூலம் மக்கள் மனதினையும் அவர்களின் வாழ்க்கை முறையினையும் நெறிமுறைப்படுத்தினர்.

அத்தகைய ஆத்ம சாந்தியை சைவப் பெருமக்கள் தங்களுடைய தாய் நாடு மாத்திரமன்றி சைவர் வாழும் அனைத்து நாடுகளிலும் பெற வேண்டியும், தங்களின் இளம் சந்ததியினர் சைவமுறை வழுவாது வளரவும் சைவர் புலம் பெயர்ந்து வாழும் அனைத்து நாடுகளிலும் அந்நாடுகளின் தகவமைப்புக்கேற்ப ஆலயங்களை அமைத்து வழிபாடுகளை நடத்தி வருகின்றனர். அத்தகைய முறையில் சமீப காலத்தில் அமைக்கப்பட்ட ஆலயமே இங்கிலாந்து குரொய்டன் தொான்ட்டன் கீத் அருள்மிகு சிவஸ்கந்தகிரி முருகன் திருக்கோயில்.

தமிழர்களின் தலையாய கடவுளாம் முருகவேளைப் பிரதான சன்னதியாகக்கொண்டுள்ள இவ்வாலயத்தில் சுந்தரவிநாயகர், கைலாயநாதர் காமாட்சி அம்மன், ஞான வைரவர், குருவாயூரப்பன், நடராஜப்பெருமான், ஐயப்பன், ஆஞ்சனேயர் தத்தம் தேவியரோடு அமைந்து அருள்புரிகின்றனர்.

சைவ சமயத்தின் அனைத்து விசேட நாட்களோடு வருடாந்த திருவிழா வைகாசி மாதத்தின் கார்த்திகை நட்சத்திரத்தினை ஒட்டி 15 தினங்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

ஆலயம் காலை 8 மணி முதல் பகல் 1 மணிவரையிலும் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் பக்தர்களின் வழிபாட்டிற்காகத் திறந்து வைக்கப்படுகின்றது. காலை 9 மணி பகல் 12 மணி இரவு 8 மணி என மூன்று காலப் பூஜைகள் நடைபெறுகின்றது. எதிர்வரும் 25-10-2003 வியாழக்கிழமை 30-10-2003 சனிக்கிழமை வரை கந்தசஷ்டிப் பெருவிழா காலையிலும் மாலையிலும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட இருக்கின்றது.

இலண்டன் வாழ் அனைத்துப் பக்தப்பெரு மக்களையும் சிவஸ்கந்தகிரி முருகன் ஆலயத்திற்கு வருகைதந்து அவனருளைப் பெற்று வாழுங்கள் என வேண்டிக் கொள்கின்றோம்.

அனைவருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ சிவஸ்கந்தகிரி முருகன் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.



திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது முது மொழி. ஓதும் போதே நன்கு பொருள் விளங்கி உள்ளத்தை உருக்கி, உடையவன் பால் ஈர்த்து விடக்கூடிய பாடல்கள் அவை. மாணிக்கவாசகப் பெருமான் இயற்றியருளியது திருவாசகம். அதில், இங்கு விளங்கியுள்ள திருச்சாழல் என்ற பகுதி பின்னும் சிறப்பு வாய்ந்தது. சிதம்பரம் எனப்பெறும் சிற்றம்பலத்தில் இப்பாடல்கள் இயற்றப்பெற்றன.சிங்கள நாட்டிலிருந்து வந்திருந்த சிங்கள அரசரின் ஊமைப்பெண்ணை மணிவாசகப்பெம்மானார் பேசவைத்த நிகழ்ச்சிகளே, பின்னர், இப்பாடல்களாக உருப்பெற்றன. எந்தை பிரானின் அருளார்ந்த செயல்களை, வினா–விடைகளாக விளக்கி வருகிறார் பெருமானார். அந்த சிங்கள இளவரசி (ஊமைப்பெண்) கேள்வி கேட்பது போன்றும் அதற்கு அவள் தோழி விடைகள் இறுப்பது போன்றும் பாடல்கள் அமைந்துள்ளன. பெருமானார் உள்ளத்தில் நிழலாக ஓடிய, அண்ணலின் அருமை பெருமைகளையும், அருள்பாலிக்கும் செயல்களையும், அழகாக வினா–விடை வடிவில், விரிவாக எடுத்துரைக்கிறார், மாணிக்கவாசகப்பெம்மான். இதில் இரண்டு வரிகள் கேள்விகள் போன்றும், அடுத்து வரும் இரண்டுவரிகள், அவற்றிற்கேற்ற விடைகள் போன்றும், பாடல்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

–திருமதி சிவன் அருள்சேதுராம்.

# மணிவாசகர் அருளிய திருச்சாழல்

**பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்**
**பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடி**
**பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை**
**ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ!**

ஏனடி பெண்ணே! தேவாதி தேவன் தேவர் தலைவன் அனைத்துலகையும் ஆளும் அரசன் என்றெல்லாம் உன் அம்பலவாணனை உயர்த்திப் போற்றுகிறாயே! நீ உருக்கமாக உயர்த்தி விளக்குகிற உருவத்தோடும், தோற்றத்தோடும் ஒப்பிட்டுப்பார்த்தால், அவர் அப்படியொன்றும் உயர்ந்தவராகத் தெரியவில்லையேடி? ஒரு தலைவனுக்குரிய மிடுக்கோ, செருக்கோ, ஆணையிடும் தன்மையோ அவரிடம் கிடையாது என்கின்றாய். ஓர் அரசருக்குரிய அணி கலன்களையும் அவர் அணிந்து மிளிர்வதில்லை! உயாந்த நிலையில் நிறுத்தி வழிபடக்கூடிய இலக்கணங்கள் ஒன்று கூட அவரிடம் இருப்பதாகத் தெரியவில்லையேடி!

அது சரி! உன் தலைவனுக்கு நான்கு பக்கமும் மணம் பரப்பும் நறுமணப் பொருள் ஏதுமே கிடைக்கவில்லையா? அழகிய இவ்வுலகைப் படைத்தவர் அவர் என்கிறாய்! அதில் மணம் நிறைந்து மலர்ந்திருக்கும் மல்லிகை மலர்களின் மெல்லிய மணத்தை அவர் அறியாரோ! குளிர்ச்சி தரும் சந்தனக் குழம்பின் நறுமணத்தையும் அவர் அறிந்திருக்க வில்லையா? மற்றும் புனுகு, ஜவ்வாது, அகில், என்ற மணம் மிகுந்த பொருள்கள் என்ன! பற்பல மலர்களின் இனிய நாற்றமிகு துளிகள் என்ன! அவற்றின் பொடிகள் தாம் என்ன! காற்றோடு காததூரம் கலந்து, நாசிக்கு விருந்தளிக்கும் இவை எவற்றையுமே என் ஆடல் அரசர் அறியாரோ! பெண்ணே! பாவம்! அவர், இவற்றையெல்லாம் குறித்து ஏதுமே அறியாதவராக, கேவலம் சுடுகாட்டில் கிடக்கும் வெண்ணிறச் சாம்பற்பொடியை எடுத்து, நெற்றியிலும், உடலிலும் வாரிவாரிப் பூசிக்கொண்டுள்ளாரே! என்ன விந்தையான செயலடி இது?

அது தான் போகட்டும்! ஏதோ அவர் இடுகாட்டிலேயே இருப்பவர். எனவே அங்கிருக்கம் சாம்பற்பொடி அவருக்குப் பிடித்தமாக இருக்கலாம். ஆனால் ஆடற் கலையில் வல்லவர் அவர்! அந்தக் கலையில் அவரை வெல்ல எவராலுமே இயலாது! என்றெல்லாம் பறைசாற்றுகிறாயே! ஆடல் அரசருக்குரிய ஆடம்பரமான அணிகலன்கள்,

பின்னும் கேளடி! பெண்ணே! என் அண்ணல் வெண்ணீற்றை வாரி வாரிப் பூசிக்கொள்கிறார் என்று எள்ளி நகையாடி ஏளனமாகப் பேசுகிறாயே அந்தச் சாம்பலும், அவருடைய திருமேனியைத் தீண்டியதும் திருநீறு என்று சிறப்புப்பெற்று மேன்மையுறுகிறதே! அதை அறிவாயா நீ? அத்திரு நீற்றின் சிறப்பினையும் நீ அறிந்திருக்க மாட்டாய்! கூறுகிறேன் கேள்.

பிணி தீர்க்கும் பெருமருந்து அத்திருநீறு! அல்லல் தீர்க்கும் அருமருந்து அது! மந்திரமாவதும், தந்திரமாவதும் அதுவே! வேதத்திலுள்ளதும் வெண்ணீறு! வெந்துயர் தீர்ப்பதும் திருநீறு. ஓதத்தகுவதும் அந்நீறே! சமயம் போற்றுவதும் சாத்திரம் புகழ்வதும் கூட அத்திருநீற்றின் மேன்மையைத்தான். தூய வெண்ணீற்றை நாம் நெற்றியில் அணிந்தால் நம் புருவங்களுக்கிடையே அமைந்திருக்கும் அறிவு நரம்பு சூடாக்கப்பெற்று சுறுசுறுப்பாகவும், துடிதுடிப்பாகவும் இயக்கப் பெறுகிறது. அதனால் நாம் அளவிறந்த அறிவு வளர்ச்சி பெறுகிறோம். பேரறிவாளராகிய பெம்மானையே அறிந்து கொள்ளும் பேறும் பெறுகின்றோம். திருநீற்றின் இத்துணைச் சிறப்பார்ந்த பெருமையினை அறியாத பேதைப் பெண்ணாக ஏதேதோ பேசிவிட்டாயே!

மற்றும் தீய பகைவனுக்கும் தெளிவான கருணையோடு அருளும் தன்மையடி அண்ணலின் பேரருள்! அதை உணர்த்தவே தான் கொடிய நச்சரவங்களைத் தம் உடலெங்கும் உலவவிட்டிருக்கிறார் என் அப்பன். நல்ல பாம்புகள் தீண்டியவுடன் மரணத்தைத் தரவல்லவையாயினும் தம்மைத் தெய்வமாக நினைத்து வழிபடுவர்களையும், தமக்குத் தீங்கு செய்ய நினையாதவர்களையும் துன்புறுத்தாத இயல்பு கொண்டவை! அதைச் சரியாகப் புரிந்து கொள்ளடி பேதைப் பெண்ணே!

மேலும் வேத வித்தகராகவும் வேத விழுப்பொருளாகவும் விளங்கும் அவரால் நம் குறைகளைச் செவிமடுத்துச் சீர்செய்து நலம் அருள இயலாதா? மறைபொருளாக விளங்கும் அவருக்கு நம் உள்ளங்களில் மறைந்திருக்கும் விருப்பு வெறுப்புக்களை அறிந்து அருள் புரிவது கடினமான செயலாகுமா? அதையும் புரிந்து கொள், அன்பின் அணங்கே!

இறுதியில் உனக்கோர் அறிவுரை கூறுகிறேன் கேள்! ஒருவருடைய உருவத்தையும், தோற்றத்தையும் கொண்டு அவரை நீ மதிப்பிட்டு விடாதே! எம் இறைவர் சாம்பலைப் பூசிக் கொண்டால் என்ன? பாம்புகளை அணிந்து கொண்டால் என்ன? அகில உலகிலும் உள்ள ஒவ்வொரு உயிரிலும் ஒவ்வொரு பொருளிலும் எம் ஈசன் நிறைந்து உறைந்திருக்கிறாரே! ஒவ்வொன்றையும் கால நேரம் தாழ்த்தாது அவ்வவரிற்கு ஏற்ப இயக்கி வருகிறாரே! அவ்வாறு இயக்கி வரும் இயல்பைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்குத்தானே தாமும் இயங்கிக் கொண்டே அசைந்து அசைந்து நடனமாடிக் கொண்டே அவர் இருக்கிறார்.

எனவே பேதைப் பெண்ணே! எம் ஐயனின் தோற்றத்தைக் கொண்டு அவரை நீ எடை போட்டுவிடாதே! எவ்வுயிர்க்கும் எளியவராக அன்பின் திருவுருவமாக அருள் புரிந்துவரும் எந்தை பிரானின் இயல்பை நன்கு அறிந்து கொண்டு அவரை வணங்கி வருவாயாக!

**பூசுவதும் வெண்ணீறு பூண்பதும் பொங்கு அரவம்**
**பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடி!**
**பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டு என்னை**
**ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ!**

**பூசுவதும்**– திருமேனி எங்கும் பூசிக் கொள்வதும்
**வெண்ணீறு**–வெள்ளை நிறமான சாம்பற்பொடியே
**பூண்பதுவும்**–திருமேனியில் அணிந்து கொள்வதும்
**பொங்கு அரவம்**–பொங்கிப் பொங்கிச் சீறுகின்ற பாம்புகளே
**திருவாயால்** – தம் வாய் திறந்து
**பேசுவதும்**–பேசுவது கூட
**மறைபோலும்**– எளிதில் பொருள் விளங்காத இரகசியமான மறைமொழி (வேதம்) போல இருக்கிறதே
**காணேடி**– இந்த விந்தையான செயல்களைச் சிந்தித்துப் பாரடி (26ம் பக்கம் பார்க்க...)

# ஏழைச் சிறார்களின் வாழ்விலே ஒளியேற்றியவர்
# பெரியார் ஆத்மஜோதி முத்தையா அவர்கள்

அன்பு, அறிவு, பண்பு, பக்தி ஆகிய மூன்று எழுத்துக்கள் மக்கள் வாழ்வில் இன்றியமையாதன. உலகில் அறிவைத் தேடும் எல்லோரும் அன்புள்ளவர்களாக இருப்பதில்லை. ஆனால் மெய்யறிவைத் தேடி ஆன்மிக வாழ்வில் புகுவோர் அன்புள்ள இதயம் கொண்டவர்களாகவே இருப்பார்கள்.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவதாரும் அறிகிலார்**

என்கிறது திருமந்திரம். சிவபெருமான் அன்பு மயமானவர் என்கிறது சைவ சித்தாந்தம். பண்பு சந்ததி சந்ததியாக ஏற்படும் சார்புப் பழக்கம், அதாவது குலப்பழக்கம் என்கிறார் அறிவுடையோர். பக்தி அவனருளாலே ஏற்படவேண்டும் என்று கூறப்படுகின்றது. திருவாசகம் பல பிறப்புக்களை எடுத்து உழலும் ஆன்மாக்கள் பல பிறப்புக்களில் செய்யும் அரும்பெரும் செயல்களினால் இறைவனின் அருள் பார்வை பெற்று பக்தி ஏற்படுகின்றது என்கின்றது. தாயின் வயிற்றிலே சிசு வளரும் பொழுதே மெய்யறிவைப் பெறுகின்றது என்கின்றது மகாபாரதம். ஏழைகளின் வாழ்விலே இறைவனைக் காண்கின்றேன் என்கிறார் பகவான் சத்தியசாயிபாபா. **வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்** என்கிறார் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள். 1918ஆம் ஆண்டு பிறந்த பெரியார் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் மெய்யறிவு மிக்க மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்றவர் என்பதைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும். ஆசிரியர்கள் உலகப் பகட்டு வாழ்க்கை வாழ்ந்த 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலே நாவலப்பிட்டியிலே ஆசிரியத் தொழிலை ஏற்று தன் 21 ஆவது வயதில் காலடி வைக்கின்றார் பெரியார் அவர்கள். அதிகாரிகளின் காலைப் பிடித்துக் கையைப் பிடித்துச் சொற்ப நாட்களில் அல்லது சில வருடங்களில் இடம் மாறிவரும் தமிழ் ஆசிரியர்களுக்கு மத்தியில் பெரியவர் அவர்கள் ஆசிரிய சேவைக் காலம் முழுவதும் நாவலப்பிட்டியில் சேவையாற்றினார். ஏன்? அவரின் உள்ளத்திலே கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த ஆன்மிகத் தீ, சேவை மனப்பான்மை, மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்ற மனப்பாங்கு போன்றவை.



அறிவினால் பொருளாதாரத்தினால் ஏழ்மை நிலையில் வாழ்ந்த மலையக மக்கள் மத்தியில் சேவையாற்றச் செய்தன. இளம் வயது தொடக்கம் மலையக மக்களுக்கு ஆசிரியப் பணியைச் சேவையாகச் செய்தார். இல்லை ஆன்மிக சேவையுடன் மருத்துவ சேவையும் செய்வித்தார். பல துன்பங்களுக்க மத்தியில் மலையக மக்களுக்கு மத்தியில் இறை நம்பிக்கையை ஊட்டினார். நாம ஜெபத்தை மலையகச் சிறார்களின் உதட்டிலே உலாவச் செய்தார். தான்பிறந்த ஏழாலைக் கிராமத்துக்கு மாற்றம் எடுத்து பிறந்த ஊருக்கு வந்து சேவை செய்யச் சொல்லி வற்புறுத்திய பொழுதும் **உங்களுக்கு சேவை செய்ய என்னைப் போல பல ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் மலையகத்திற்கே என் போன்றவர்கள் தேவை** என மறுத்துவிட்டார்.

சமய உணர்வையும் சமயதத்துவங்களையும் இலகுவான தன் பிரசாரங்களினாலும் சொற்பொழிவுகளினாலும் எழுத்துக்களினாலும் பரப்பினார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட ஆத்மஜோதி சஞ்சிகை 35 வருடங்களாக மலயகமக்களை நல்வழிப்படுத்தியது.
1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்பு தென் மராட்சியில் குடியேறிய பெரியார் அவர்கள் நாட்டின் போர்ச்சூழலினால் அல்லலுறும் ஏழை மக்களின் நிலையைக் கண்டு பரிதவித்தார். இறை பிரார்த்தனையாலே ஏழைகளை உய்விக்கலாம் என்பதைத் தன் அருட் சக்தியினால் உணர்ந்த பெரியார் அவர்கள் மக்களின் சுபிட்சம் வேண்டி தன் அடியார்கள் புடை சூழ பாதயாத்திரை செய்தார். மக்களை தன் அருட்பார்வையினாலும் அன்பு மொழிகளினாலும் நல்வழிப்படுத்தினார்.

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவைத் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கைதடி அநாதைச் சிறுவர் இல்லத்தைப் பொறுப்பெடுத்துச் சைவச் சிறுவர் இல்லம் எனப் பெயர் சூட்டி தாய் இல்லாத குழந்தைகளுக்கு தாயாகவும் தந்தை இல்லாத குழந்தைகளுக்கு தந்தையாகவும் இருந்து அவர்களின் மேல் அன்பைச் சொரிந்து வளர்த்தார். சைவச் சிறுவர் இல்லப் பிள்ளைகள் வாழுவதற்கு உரிய பணத்தைக் கனடா, சுவிஸ், நாடுகளில் அடியார்களைத் தட்டிக்கொடுத்து நிதி திரட்டினார். வங்கியில் பெரும்தொகையைச் சேமித்து அநாதைப் பிள்ளைகள் தொடர்ந்து வாழுவதற்கு வழிசமைத்தார். இந்தோனேசியாவில் இண்டு வருடம் வாழ்ந்து அங்கே காணப்பட்ட மொழி வறுமையையும், சமயவறுமையையும் கண்டு கிளர்ந்தெழுந்து பல சான்றோர்களைத் திரட்டி பல தமிழ் சமயப் பாடசாலைகள் உருவாகுவதற்கு வழிசெய்தார்.

94, 95 ஆம் ஆண்டுகளில் கனடாவிற்கு சென்றிருந்த பொழுது அங்கேயுள்ள இளம் சந்ததியினருக்கு மத்தியில் எமது கலாசாரமும் மொழியும் சமயமும் மருவிப் போவதைப் பார்த்துத் தாங்க முடியாத வேதனையுற்றார். **கனடாவில் ஊமைத்தமிழர்களையும் செவிட்டுத் தமிழர்களையும் காண்கின்றேன்** என்று தன் அன்பர்களுக்கு மத்தியில் இடித்துரைத்தார். தமிழ் இளம் சிறார்கள் தமிழ் மொழியைப் பேசாமல் ஊமைகளாகவும், சிறார்களின் பெற்றோர்கள் பிள்ளைகளின் சமய மொழி வளர்ச்சியில் பராமுகமாக இருப்பதால் செவிட்டுத் தமிழர்கள் என்றும் கூறினார். கனடாவில் பிள்ளைகளுக்கு முதல் பெற்றோர்கள் திருந்த வேண்டுமெனத் தன் கூட்டு வழிபாடுகளில் எடுத்தியம்பினார். பிறருக்காக சிந்தித்து வேதனையுற்ற பெரியார் நல்லனவற்றைச் செய்ய வேண்டும் என்று சிந்திக்கும் முன்னோடிகளிடம் இளம் சிறார்களுக்கு தமிழையும் சமயத்தையும் போதியுங்கள் என்று வலியுறுத்தினார். பெரியாரின் ஆசியினால் பல நூற்றுக்கணக்கான பிள்ளைகள் சைவத்தையும் தமிழையும் படிக்கின்றார்கள்.

மகான்கள் எண்ணங்கள் எல்லாம் செயல் வடிவம் பெறாமல் விடுவதில்லை. ஞானிகளின் அறிவுரைகள் பொய்ப்பதில்லை. இறைவனின் பேரொளிப் பிழம்பில் இரண்டறக் கலந்த ஞானசுரபி முத்தையா வள்ளல் அவர்கள் தமிழ் கூறும் நல் உலகெங்கும் பிரகாசித்துக் கொண்டேயிருப்பார்.
வளர்க அன்போடு சேர்ந்த அறநெறி !

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே**



–சிவ முத்துலிங்கம்

விவேகானந்தரின் வீரத்தோற்றமும் யாழ். இந்துக் கல்லூரியில் அவர் ஆற்றிய சொற்பொழிவும் யோகநாதனின் மனதில் மூளாத்தீப்போல் உள்ளே கனன்ற ஆன்ம ஒளியைச் சுடர்விட்டெரியச் செய்தன. அந்நியத்தை எதிர்த்துச் சைவத்தை நிலைநாட்ட நாவலரால் இறுக்கி முறுக்கேறிய சைவத்தின் வளர்ச்சிக்கு ஒரு மென்மை வளைந்து கொடுக்கும் தன்மை (கடநஒைடிடைவைல) தேவைப்பட்டது. அதனைத் தந்தவரே யோகசுவாமிகள். அதுவே அவர் ஏற்படுத்திய தாக்கம். இந்தப் பின்னணியில் அத்துவைதம், துவைதம், விசிஸ்டாத்துவைதம் ஆகிய எல்லாவற்றையும் சைவ சித்தாந்தம் ஏற்றுக்கொள்கின்றது. இம் மூவகையினையும் ஒருமைக்கொள்கை, பன்மைக்கொள்கை என இரண்டினுள் அடக்கிவிடலாம். சைவ சித்தாந்தம் இந்த இரு நிலையினையும் ஏற்றுக்கொள்கின்றது.

சைவத்தின் மூலவராகிய திருமூலர் அருளிய திருமந்திரமும் பதி, பசு, பாசம் எனப் பகர்மூன்று எனப் பன்மையை ஏற்றுக்கொண்டும், சீவனும் சிவனும் வேறில்லை என ஒருமையையும்

# யோகசுவாமிகள் ஆன்மிக வாழ்வில் ஏற்படுத்திய தாக்கம்

வித்துவான் க.ந.வேலன் (சென்ற இதழ் தொடர்ச்சி)

வைத்தே சுவாமிகள் தத்துவத்தில், சமயத்தில், வாழ்வியலில், ஏற்படுத்திய தாக்கங்கள் எவை எவை என்பனவற்றைச் சிந்திக்கவேண்டும்.

## தத்துவத்தில் ஏற்படுத்திய தாக்கம்

இந்து சயம தத்துவத்தைக் கூறும் ஆதி நூலாகிய உபநிடதத்தில் வரும் அத்துவைதம் என்னும் தொடர் இறைவனும் உலகும் வெவ்வேறல்ல, இறைவனே இவ்வுலகு. இறைவன் அன்றி வேறொரு பொருள் இல்லை என்னும் அத்துவைதமும் இறையும் உலகும் வெவ்வேறு என்னும் துவைதமும் இறைவனின் விசிஷ்டமே இவ்வுலகு என்னும் விசிஷ்டாத்துவைதமும் என மூவிதமாகப் பொருள் கொள்ளப்பட்டுத் தத்துவ உலகம் தடுமாறிய வேளையில்,

**பொய் கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட நாதன்** எனப் போற்றப்பட்ட மெய் கண்டார் தாமருளிய சிவஞான போதத்தின் இரண்டாம் நூற்பாவில் அத்துவிதப் பொருளைத் தெளிவுபடுத்தினார். ஆனாலும் சைவ சித்தாந்திகள் உட்படப் பலர் தெளிவு பெறவில்லை. மெய்கண்டார் கண்ட விளக்கத்தின் மூலம் வற்புறுத்துகின்றது. இக்கூற்றுக்கு ஆதாரம் காட்டும் ஆசிரியர் சீவனார் சிவனை அறிகிலர் – அதனால் பன்மை தெரிகிறது. **சீவனார் சிவனை அறிந்த பின் சீவனார் சிவனாயிட்டிருப்பரே** என அறிந்த பின் ஒருமை உணரப்படும் என்கிறார். எனவே ஒருமை, பன்மை ஆகிய இருநிலைகள் ஆன்ம பக்குவ வேறுபாடன்றி வேறல்ல என்பது பொருளாகின்றது. இந்திய தத்துவ உலகில் பிரச்சனையாகித் தத்துவ மாதவாதிகளால் விவாதப் பொருளாகி மக்களுள் பகை வளர்த்த இந்த அறியாமையை மெய்கண்டார் நீக்கிச் சைவ சித்தாந்தத்தின் உயர்வை விளக்கியுள்ளார். இதனை உணர்ந்த தாயுமானவர் **சைவம், மதங்களின் இராசாங்கத்து அமர்ந்துள்ளது** எனப் போற்றுகின்றார்.

சைவசித்தாந்தம் முப் பொருளையே பேசுகின்றது எனப் பள்ளிச் சிறுவர்களுக்கும் புகட்டப்படுகின்றது. இது உண்மை. ஆனால் சைவ சித்தாந்தம் ஒருமைக்கொள்கையையும் சொல்கிறது என்னும் உண்மை மறுக்கப்பட்டு அல்லது மறக்கப்பட்டு வருகின்றது. இதற்குக் காரணம் வேதாந்தக் காழ்ப்பு உணர்வும், மத வெறியுமாகும். அனுபூதி இன்றி மத நூல்களைப் படித்தவர்களே இந்தநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அனுபூதி

மான்களும் **வாசித்துக் காணொணாது பூசித்துப் பேணொணாதது என்று விட்டனர்.** படித்த மதவாதிகள் பன்மை உணர்விலிருந்து விடுபடாதவர்கள் – விடுபட முடியாதவர்கள். இவர்களுக்குப் பரம் தெரியாது, பதார்த்தங்களே தெரியும். பார் முதற் பூதங்கள் பரத்தை மறைத்திருப்பதனால் பரம் புலனாகவில்லை.

உலகர்க்குச் சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருளே உண்மை. ஞானிகளுக்குப் பதியே உண்மை. இந்த ஞான ஒருமைக் காட்சி எளிதில் வாய்க்கப்பெறுவதில்லை. இந்த உண்மையைத் தாயுமானவர் என்னும் ஞானசிகரம் மிக அருமையாக விளக்கியுள்ளார். **சந்தமும் எனது செயல்** என்று தொடங்கும் ஒரு அருமைப் பாடலால் பதி, பசு, பாசம் என்னும் பன்மை நிலையில் உழன்ற தாம், மிக மேலான பதி என்னும் ஒருமை நிலையுணர்ந்த அனுபவததைக்கூறும் போது,

**இந்த நிலை தெளிய நான் நெக்குருகி வாடிய**
**இயற்கை திருவுளம் அறியுமே**
**இந்நிலைமிலே சற்று இருக்க என்றால் மடமை**
**இத சத்துரு வாக வந்து சிந்தை குடிகொள்ளுதே**
**மல மாயை கா்மம்**
**திரும்புமா தொடுவழக்காய்**
**ஜென்மம் வருமோ எனவும் யோசிக்குதே மனது**
**சிரத்தை எனும் வாளும் உதவி**
**பந்தமற மெய்ஞ்ஞான தீரமும் தந்து எனைப்**
**பாதுகாத்து அருள செய்குவாய்**
**பாா்க்குமிட மெங்குமொரு**
**நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே**

என்று பாடுகின்றார்.

திருமூலர் சொன்ன உண்மைப்பொருளை உணராத காரணத்தால் ஈழத்தைச் சிவபூமியென்றும் சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மையே சைவசித்தாந்தத்தின் முடிபென்றும் எம் நாட்டில் வாழும் சில சைவர்கள், சைவ சித்தாந்திகள் நம்பிக்கை கொண்டுள்ளனர். மெய்ஞ்ஞான அனுபூதியற்றவர்களும் சைவ சித்தாந்த சாத்திர தோத்திர நூல்களின் உண்மைப் பொருளைக் கற்றும் தெரியாதவர்களும் செல்வாக்கோடு வாழ்ந்த ஒரு சூழ்நிலையிலேயே யோக சுவாமிகளின் வருகை நிகழ்ந்தது.

சுவாமிகள் சமய சாத்திரங்கள் (சைவ சித்தாந்தம் உட்பட) எதையும் எழுத்தெண்ணிக் கற்றவரல்ல. அத்தகையதொரு தேவை அவருக்கிருக்கவில்லை. ஆனால்

கல்லாது யாவுங்கற்றேனே
காயத்தை என்றன் கைக்குள் வைத்தேனே
அண்ட சராசர மெல்லாம்– சிவசிவ
அகத்திலே கண்டு தரிசித்துக் கொண்டேனே

எனப் பகருவதிலிருந்து அவரது மெய்ஞ்ஞானம் எத்தகையது எப்படி வாய்த்தது என்பது புலனாகின்றது. முன்னைத் தவத்தால் சுவாமி விவேகானந்தரைத் தரிசிக்கும் பேறு வாய்த்தது போலவே நல்லூர் முருகனின் அவதாரமெனச் சுவாமிகளால் வணங்கப்பட்ட செல்லப்பா சுவாமிகளின் சீடனாகும் பேறும் வாய்த்தது. இத்தகைய பெரும்பேறும் அதற்குரிய தகுதியும் சுவாமிகளுக்கு இருந்ததினால்

**இந்தநிலை தெளியநான் நெக்குருகிவாடிய**
**இயற்கை திருவுள மறியுமே**

எனத் தாயுமானவர் போல் வருந்தும் நிலையன்றிச் சமயாதீதப் பெரும் பொருளை, வேதாந்தமும் சைவ சித்தாந்தமும் கூறும் உண்மைப் பொருளை, வேதாந்ததசித்தாந்த சமரச ஞானத்தைக் குருநாதர் செல்லப்பன் உணர்த்த உணர்ந்துகொண்டார். மாயை வசப்பட்டுப் பன்மை உணர்வோடிருந்த தம்மை ஒன்று இரண்டு என்ற பேதத்தினைப் போக்கியது ஒரு சொல் என்பதனை

**ஒரு சொல்லால் உளம் தூய்மை ஆச்சே–சிவசிவ**
**ஒன்று இரண்டு என்றிடும் பேமும் போச்சே**

என்று பாடுவார். பன்மை உணர்வை அகற்றிய அந்த ஒரு சொல் எது? அந்தச் சொல் **நீயார்?** என்று வினவிய சொல்லாகும். நற்பெண்டாட்டிக்கு ஒரு சொல் போல பக்குவமடைந்த சீடனுக்கு இந்த ஒரு சொல் போதும்.

(48ம் பக்கம் பார்க்க ...)

# CHANDRA

## Super Market & Off Licence


உங்களுக்குத் தேவையான சகலவிதமான மளிகைப் பொருட்கள், இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருட்கள், கடல் உணவு வகைகள், மரக்கறி வகைகள், பழ வகைகள், வீட்டுக்குத் தேவையான எவர்சில்வர் பாத்திரங்கள், கோவில் பூசைக்குரிய சாமான்களையும் அத்துடன் மேல்நாட்டுக் குடிவகைகளுடன் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குடிவகைகளையும் சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.....



அத்துடன்
ஓடியோ,
வீடியோ,
வீடியோ சீடிக்கள்
வாடகைக்கும்
பெற்றுக் கொள்ளலாம்.

**209 - 211 Bromley Road,**
**Catford, London SE6 2PG.**

**Telephone**
**020 8333 8680**


KRS
Oriental Store
33 Lee High Street
Lewisham
London SE13 5NS
தரமான இலங்கை, இந்திய
உணவுப்பொருட்கள் உடன்
மரக்கறி வகைகள்
ஓடியோ, சீடி, வீடியோ
அனைத்தையும் நியாயமான
விலையில் ஓரே இடத்தில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்.
Telephone
020 8297 9432

KUMARANS

# KUMARANS
# குமரன்ஸ்

**Imports & Exports, News Agent,
Off Licence & Grocery**

**Kumarans Limited
142 Hoe Street
Walthamstow
London E17 4QR**

**Tel: 020 8530 3033
020 8521 4955
Fax:020 8521 5655
020 8521 9482**

**136 Hoe Street
Walthamstow
London E17 4QR**

**Tel: 020 8520 5960
Fax: 020 8530 5655**

**144 Hoe Street
Walthamstow
London E17 4QR**

**Tel: 020 8521 4411
Fax: 020 8530 5655**

லீலா

லீலா தயாரிப்புக்களின்
ஏக விநியோகஸ்த்தர்கள்

உங்களுக்கு அன்றாடம் தேவையான
லீலா தயாரிப்புகளை
மொத்த விற்பனை விலைக்கு
தொகையாக வாங்கிச் சிக்கனமடையுங்கள்

**FREE PARKING AVAILABLE
FOR OUR CUSTOMERS**

**Branches at:**

**69 Holloway Road
London N7**

**Tel: 020 8609 1912
Fax: 020 8609 0501**

**243 Hoe Street
Walthamstow
London E17 4QR**

**Tel: 020 8520 6210
Fax: 020 8520 6366**

**532-536 Forest Street
Walthamstow
London E17**

**Tel: 020 8925 7720
Fax: 020 8925 7721**

SKC

# SRI KANTH & CO.

## Solicitors & Property Business Centre
## SOLICITORS & ESTATE AGENTS




## Sales, Letting & Management

**PROPERTY SALES & CONVEYANCING UNDER ONE ROOF**

We also practice in most areas of LAW and have been undertaking both private & Legal Aid work since 1992

557 High Road, Wembley, Middlesex HA0 2DW

Telephone

**020-8795 0648**

Fax: 020-8795 0649
Mobile: 07831 195979

Opening Hours:
Mon-Fri: 9.00am - 6.00pm
Sat: 9.30am - 5.00pm

# சைவக் கிரியைகள்

**கிரியை என்பது செய்கை எனப்பொருள்படும். புறச்செய்கைகளாலே நடத்தும் இறைவழிபாடுகளுள்ளே கிரியைகள் அடங்கும். சைவ மகன் ஒருவன் பிறந்த காலம் தொட்டு இறக்கும் வரை அவனுடைய வாழ்க்கையில் இடம்பெறும் சைவக்கிரியைகள் பலவாகும். இவற்றின் முறைமையுணர்ந்து செய்வது சைவமக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். வேதசிவாகமங்கள் சைவக் கிரியைகளின் விதிகளையும் விளக்கங்களையும் தருகின்றன. இக்கிரியைகளுள் மரணக்கிரியைகள் பற்றி தொடர்ந்து நோக்குவோம்.**

(இதழ் 43 இன் தொடர்ச்சி)

## அஸ்தி சஞ்சயனம்

உடலைத் தகனம் செய்த அன்றேனும், மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாளேனும் மயானத்துக்குச் சென்று என்பெடுத்தல் அஸ்தி சஞ்சயனம் எனப்படும். தகனஞ் செய்த இடத்திலே சிவாக்கினி உண்டாக்கி (அக்கினி அவிந்து விட்டால்) பிராயச்சித்த ஓமமுஞ் செய்து உத்வாசஞ்செய்தல் (எழுந்தருளிவிக்கப்பட்ட மூர்த்தியை உரிய இடத்தில் சேர்ப்பித்தல்) வேண்டும். பின்னர் தைலம், அரப்பு, பால், பழங்கள், இளநீர் முதலியவற்றால் அபிஷேகஞ் செய்து கால், கொப்பூழ், மார்பு, நெற்றி, தலை ஆகியவற்றிலுள்ள என்புகளைக் கூறுபடுத்திப் பூசை செய்து கண்ணை மூடிக்கொண்டு கையில் வட்டுக்கத்தரிக்காயைக் கறுப்புக் கயிற்றால் கட்டிக்கொண்டு எடுத்து ஒலி எழாவண்ணம் பாத்திரத்தில் இடல்வேண்டும். சாம்பரையும் அள்ளிய பின்னர் அவ்விடத்தைச் சுத்தி செய்து உழுது தானியம் விதைத்து நெற்பொரி, மாஅடை, தாம்பூலம், பழவகைகள் முதலியவற்றைப் பூத பிரேத பைசாசங்களின் பொருட்டுப் பலியாக இட்டுவிடல் வேண்டும். சாம்பரையும், அஸ்தியையும் ஆறு, சமுத்திரம் முதலான புண்ணிய தீர்த்தக் கரையிற் சேர்த்தல் நல்லது. இதனைக் காடாற்றல் என்றுஞ் சொல்வர். (காடு– மயானம், ஆற்றல்– சிதையில் உள்ள தீயை ஆறும்படியாகச் செய்தல்)

## பாஷாணத் தாபனம்

இது சிதையில் அந்தியேட்டி செய்த பின்னர் வீட்டிலே செய்யப்படும் கிரியை. இதனைக் கல்லெடுப்பு என்பர். வீட்டினுள்ளேயாயினும், வீட்டுக்கு முன்னர் இதற்காக அமைக்கப்பட்ட பந்தலிலேயாயினும் தெற்குத் திசையில் வடக்கு வாயிலாக அமைத்து மாவிலை, தோரணம், மாக்கோலங்களாலே அலங்கரித்து, மேடையிற் பானையிலே கும்பமும் அதற்கு முன்பாகக் குழியுண்டான சட்டியிற் கல்லும் வைத்துப் பூசை ஆரம்பித்தலாகும். வசதிக்கும், ஆசாரத்திற்கும், சம்பிரதாயங்களுக்கும் ஏற்ப மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாள்களிலும் ஆசௌசம் (தொடக்கு) நீக்கும் நாளிலும் பூசை செய்தல் நல்லது. ஆசௌச நாளை அந்தமாகக் கொண்டு அதற்கு முன் எத்தனை நாள் வேண்டுமாயினும் செய்யலாம்.இக்கல்லுப் பூசை தகனஞ் செய்யப்பட்ட ஆன்மாவின் வெப்பம், பசி, தாகம் ஆகியன நீங்கும் பொருட்டும், சூக்கும தேகம் விருத்தியடைவதற்கும், மந்திர தேகமாகும் பொருட்டும், பிரேதவடிவம் நீங்கும் பொருட்டும், ஆன்மாவின் பலவகை உணவு விருப்பங்களைத் திருப்தி செய்தற் பொருட்டும் செய்யப்படுவதாகும். இவற்றிற்காக வாச(வஸ்திரம்), குச(தர்ப்பை), தில(எள்ளு) தருப்பணமும், பிண்டமிடுவதும், நைவேத்தியம் கொடுப்பதும் உருத்திரருக்குப் பலியிடுவதும், பிரபூத பலி (படையல்) போடுவதும் நடைபெறுவதுண்டு.இவை பெரும்பாலும் தீட்சை பெற்றவர்களுக்கே செய்யத்தக்கன. தீட்சை பெறாதவருக்கு இவற்றைச் செலவு என்ற முறையில் எட்டாம் நாளிலே செய்வர்.

## கல்லுப் பூசைமுறை

வேதிகையில் வைத்திருக்கும் கும்பத்தில் உருத்திரர், ஈசுவரர், சதாசிவர் என்பவருள் இறந்தவர் பெற்ற தீட்சைக்கேற்ற மூர்த்தியை

எமது ஆணவம் எப்படி வந்தது?

# வல்வினையேன் தன்னை மறைந்திட முடிய மாய இருள்!

**திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம்**

சைவ சித்தாந்திகள் ஆணவத்தினை மாய இருள் என அடையாளம் காண்பர். ஏனெனில் ஆணவம் உயிர்கள் அறிவில் வியாபித்து இருந்து, அறிவினை மறைத்து நிற்கும். அதனாலே உயிர்கள் நிலையான இன்பம் எது? நிலையற்ற இன்பம் எது? என்று பகுத்தறிய முடியாதிருக்கின்ற முதல் நிலையைக் கேவல நிலை என்பர். அதாவது உயிர்களின் மீட்பிற்காக இறைவன் இரக்கம் கொண்டு தருவதாகிய உடலை எடுக்கும் நிலைக்கும் முற்பட்ட நிலை, தனியே கிடந்த நிலையாகும். இந்நிலை அறிவு இருந்தும் ஆணவத்தால் மறைப்புண்டதனால் அறிவின் தொழிற்பாடுகள் அற்ற நிலையாகும். இவ்வாறு உயிர்கள் அநாதி முதலே ஆணவத்தால் கட்டுண்டிருக்கும் நிலையைக் **காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண் இலாக் குழவியைப் போல் கட்டுண்ட நிலை** எனக்கூறுவர். ஒரு குழந்தை தாயின் இருள் கவ்விய கருப்பையில் அறிவற்றுக் கிடப்பது போல், உயிரும் ஆணவக் கருவறையில் கட்டுண்டு கிடக்கின்றது என்பது இதன் பொருளாகும்.

மேலும் ஆணவம் ஒரு பொருளேயாயினும் எல்லா உயிர்களின் அறிவினையும் மறைத்து அணுவடிவில் பீடித்திருப்பதனால் இது உயிருக்குக் குற்றமேயொழிய, குணமாகாது. இந்நிலையை செம்பில் களிம்பு போலவும், விறகில் தீப்போலவும், நெல்லில் உமிபோலவும், மாணிக்கக்கல்லை நச்சுவாய்க்குள் கொண்டுள்ள பாம்பு போலவும் என ஒப்பிட்டுக் கூறுவர். ஆனால் இருளுடன் ஒப்பிடுகையில் இருளானது எல்லாப் பொருட்களையும் மறைத்துத் தன்னைக் காட்டும் இயல்புடையது. ஆனால் ஆணவமோ தன்னையும் காட்டாது தன்னுள்ளே இருக்கின்ற உயிரையும் காட்டாது. இந்த உவமை மூலம் ஆணவவலிமை உணர்த்தப்பட்டது.

உயிர்களின் இந்நிலைக்கிரங்கியே இறைவன் படைப்புத் தொழிலை நிகழ்த்தி உயிர்களை உடல், பொறிகள் முதலான கருவிகளுடன் கூட்டி, புவன போகங்களையும் கொடுத்து உயிர்களின் அறிவு தொழிற்பட உதவுவான். இவ்வாறு உயிர்கள் இறையருளால் உடலுடன் கூட்டப்பெறும் நிலை சகல நிலை எனப்படும். அதாவது ஆணவத்துடன் கூடியிருக்கும் உயிருக்குக் கன்மம், மாயை ஆகிய மற்ற மலங்களைக் கூடும் நிலையாகும். மாயை, கன்ம மலங்கள் என்பன அழித்தல் காலத்தில் இறைவனிடத்தில் ஒடுங்கிக் கிடந்து, பின் மீண்டும் உயிர்களின் ஆணவவலியைக் குன்ற வைப்பதற்காக, அவரவர் கன்மத்திற்கேற்ப கூட்டப்படுகின்றன. படைப்பின் போதே இவை கூட்டப்படுவதனால் இவற்றை இடையே வந்து சேர்ந்தவை எனும் பொருளில் ஆகந்துக மலம் என்பர்.

இவ்வாறு உயிர்கள் கன்மத்திற்கேற்ப மாயா காரியமான உடல் பொறிகளுடன் கூட்டம் பெற்றதும் அறிவு விளக்கம் பெறுகின்றன. ஓரறிவு முதல் ஆறறிவு வரை ஈறான எல்லா உயிர்களும் அறிவைப் பயன்படுத்துகின்றன. எனவே உயிர்களின் அறிவை ஆணவம் மறைக்க, இறைவனே இவ்விருளை அகற்றுபவன் ஆகின்றான். உயிரின் மூலநோயான ஆணவம் அறிவைப் பீடித்திருப்பது. அதனைக் குணப்படுத்த உயிரின் அறிவுக்கு அறிவாய், ஒன்றாய், உடனாய், வேறாய், நிற்கும் இறைவனாலேதான் முடியும். இறைவனளிக்கும் மருந்து வினைப்பயன் ஆகும். இதற்காகிய இடம் மாயாகாரியமான உலகங்களும் இன்பங்களுமேயாம்.

இருள் மறையும் பொழுது தான் பொருள்கள் புலப்படுகின்றன. இவ்விதமே மருள் அகலும் பொழுதுதான் அருள் புலப்படும். அருள் புலப்பட பேரின்பமான பிறப்பற்ற நிலையை உயிர்கள் எய்தமுடியும்.

பாசம் எனும் சொல்லால் ஆணவம், கன்மம், மாயை, மாயாகாரியம், மறைப்புச் சக்தி என ஐந்தும் உள்ளடக்கப்படும். இவற்றுள் மறைத்தலைச் செய்யும் திரோதான சக்தி சிவ சக்தியே. இச் சிவ சக்தியின் அருளாலே மற்ற நான்கு மலங்களும் தொழிற்படுகின்றன. மறைப்புச் சக்தியாகிய சிவ சக்தி உயிருக்குயிராய் நின்று கன்மத்திற்கேற்ப அறிவிக்கும்.

உயிரின் மலவலிமைக் கேற்ப சிவசக்தி பந்தம் செய்வதனால் அதுவும் பாசமெனப்படுகின்றது. ஆனால் உயிரின் பந்தநீக்கத்தில் இதுவே அருட்சக்தியாத் தொழிற்படும். உயிர் திருவருட்சக்தியினால் பக்குவமடைந்துவரினும் மலவலிமையால் செருக்குற்று அத்திருவருள் உதவியினால் காணும் உண்மையைத் தானே கண்டேன் எனக்கருதும். இந்நிலையிருப்பின் உயிர் இன்னமும் ஆணவத்தின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை என்பது புலனாம்.

உயிர்களின் மாயாமலம் பக்குவப்படவேண்டியே காத்தல் நடைபெறும். மாயை நிலையில்லா உலகையும், இன்பங்களையும் நிலையானவை என மருளவைக்கும். இந்த மருள் தன்மை கெடுவதே மாயாமலபரிபாகமாகும். பின் கன்ம மலம் பரிபாகம் நிகழ வேண்டும். இதற்கு உலக இன்ப, துன்பங்களை அனுபவித்து இவற்றால் உயிர்க்குப் பயினில்லை என்று உவர்ப்பு ஏற்பட்டு, இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதும் நிலையே கன்மமலபரிபாகமாகும். இந்தக் கன்மத்தின் நல்வினை, தீவினைக் கேற்ப உயிர்கட்கு உடல்கள் மாற்றியமைக்க வேண்டியிருக்கும். இந்த மாற்றம் செய்வதற்காகவே படைத்தவற்றை மீண்டும் ஒடுக்கம் செய்யப் படுகின்றது. இவ்வாறு ஆணவமலபரிபாகத்திற்காகப் படைப்பும், மாயாமல பரிபாகத்திற்காக காத்தலும் பின் கன்மமல பரிபாகத்திற்காக அழித்தலும் நடைபெறுகின்றன. இவ்வாறு படைத்துக், காத்து ஒடுக்கம் செய்யும் சிவத்திடமிருந்தே மீண்டும் உலகம் தோன்றும்.

எனவே உயிர்களுக்குத்திருவருள் உதவியில்லை ஆயின் விளக்கொளி பெறாத கண்போல மெய்யுணர்வு கிடைக்கப்பெறாது. உயிர்கள் அறிவிக்க அறியும் இயல்புடையவை. தமது அறிவு விளக்கம் பெற உறுதுணையினை திருவருட்சக்தியை மேலும் மேலும் நாடுகையில் இறைவன் அவர்களுக்கு எளியனாகின்றான். இறைவன் உயிர்களுடன் ஒன்றாய், உடனாய், வேறாய் நிற்பவன். அதனால் தமது இருளையகற்றி, தம்முடன் ஒன்றாய் கலந்திருக்கும் இறைவனிடமே உள்ளம் உருகி விண்ணப்பித்தால், அவன் அருளால் பிறவிநோய் அறுந்துபோம். அன்றேல் இன்பதுன்பங்களைச் சுழற்சியாக அளிக்கவல்ல பிறப்புவட்டம் தொடரும். எனவே தான் தன்மீது கழிவிரக்கம் கொண்டு திருவருள் பாலித்த இறைவனின் பாதங்களில் தன்னை அர்ப்பணித்த மணிவாசகரும் வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருளை அகற்றி விடுமாறு இறைவனிடம் இறைஞ்சினார். இறுதியில் சிவனுடன் இரண்டறக் கலக்கும் நிலையையும் அடைந்தார்.

★✧✪


தமிழ் உலகிற்குத் தனித்துவம் வாய்ந்த தகவல் ஏட்டினை 1994 ஆம் ஆண்டு முதல் அளித்த

**பிரித்தானிய**

**தமிழ் ஓலைகள்** நிறுவனம் தமது 11வது

தமிழ் ஓலைகள் 2004 ஐ வழமைபோலத் தமிழ்ப் புத்தாண்டு 14-04-2004 இல் வெளியிடுகிறார்கள். தங்கள் விளம்பர விபரங்களை இணைக்க விரும்புவோர் தயவு செய்து 30-01-2004 க்கு முன்பதாக அனுப்பி வைக்கவும்.

52 Kingsley Road, Wimbledon, London SW19 8HF

Tel: 020 8543 2126, 020 8942 8745 Fax: 020 8540 3442

email: editor@tamilpages.org

கடந்த வருடம் வர்த்தகர்களால் உறுதி செய்யப்பட்ட 30000 பிரதிகளை வெளியிட்டு ஐரோப்பாவின் தமிழ் பிரசுரங்களில் நுகர்வோர் தொகையிலும் பிரசுர எண்ணிக்கையிலும் தொடர்ந்து முதல் இடம் பெற்றுவருகின்றார்கள்

# ஐயம் தெளிவோம்!

**நமக்கோ, வீட்டில் குழந்தைகளுக்கோ தொடர்ந்து நோய், நொடி வந்தால், மந்திர சாஸ்திரகாரர் தெய்வக் கோளாறு என்கிறார். ஜோதிடர் கிரக பலன் என்கிறார். டாக்டர் மருத்துவ ரீதியாகக் காரணம் சொல்கிறார். தர்மசாஸ்திரம் அறிந்தவர்கள் பூர்வ கர்ம பலன–ாகத்தான் இது ஏற்படுகிறது என்கிறார்கள். எதை நாம் எடுத்துக்கொள்வது? இதற்கு நிவர்த்தி என்ன?**

மழை பெய்தால் சில இடங்களில் நன்றாக நெல் விளைகிறது. நெல் விளைந்து முற்றிவிட்ட இடத்திலும் பயிர் அழுகிவிடுகிறது. இன்னொரு இடத்தில் பசுமை செழிக்கிறது. வேறொரு இடத்தில் வெள்ளச்சேதம் ஏற்பட்டு அடியோடு போய்விடுகிறது. எல்லாவற்றுக்கும் அடிப்படை மழைதான். ஆனால் அதிலிருந்து எத்தனை விதமான விளைவுகள் ஏற்பட்டு விடுகின்றன? அது போல் நாம் இன்று அனுபவிக்கின்ற சுகங்களுக்கும், கஷ்டங்களுக்கும் காரணம் நாம் முன்னேமே இந்த ஜன்மாவிலோ, பூர்வ ஜன்மாவிலோ செய்த நல்லது கெட்டதுகள்தாம்.

ஒருவர் செய்கிற கர்மம், அதன் பலன் இவையே மனித வாழ்வின் சுகதுக்கங்களுக்கு முதற்காரணம். இதற்கே துணைக்காரணமாக அல்லது அடையாளமாக, கிரகசாரம், தெய்வகுற்றம், ஆரோக்கியக் குறைவு முதலியன அமைகின்றன. ஜாதக ரீதியில், வைத்திய ரீதியில், மாந்திரீக ரீதியில் எப்படி வேண்டுமானாலும் பலன் தேடிக் கொள்ளலாம். ஆனால் இந்த விளைவுக்குக் காரணம் மட்டும் பூர்வ ஜன்மக்கர்மா தான் என்பதை உணரவேண்டும். அந்தக் கர்மா தீருகிறபோது தான் அவை பலன் தரும். பகவான் விட்ட வழி என்று பக்தியோடு நம் வாழ்க்கையை ஈசுவரார்ப்பணம் செய்துவிட்டுப் பேசாமல் கிடக்கிற மனப்பக்குவம் இருந்தால், எல்லவற்றையும்விட அது சிலாக்கியம். அதுவே பெரிய பரிகாரம். உண்மையான பரிகாரம்பூர்வ கர்ம சமாசாரம் எப்படிப் போனாலும், இனிமேலாவது கர்ம பாரம் ஏறிவிடாமல் நாம் பார்த்துக்கொள்வதே முக்கியம். பழையனவற்றிற்குப் பரிகாரம் தேடுவதை விட, புதிய சுமை சேராமல், பாவம் பண்ணாமல் வாழ்வதற்கு ஈசுவரனைத் துணைக்கொள்வதே முக்கியம்.

– ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்

**வேதாந்த நூல்களில் உள்ள நுட்பமான விளக்கங்களை என்னால் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆம்மிகச் சொற்பொழிவுகளில் கூறப்படும் தத்துவ விவாதங்களும் எனக்கு விளங்குவதில்லை. அனாலும் பக்தி மார்க்கத்தைப் பின்பற்ற விரும்புகிறேன். அது சாத்தியமாகுமா?**

குடிப்பதற்குத் தண்ணீர் மொள்ளும்போது, குளத்திலிருந்து லேசாக மேலேயுள்ள தெளிந்த நீரை எடுத்துக் கொள்ள வேண்டுமே ஒழிய, சேற்றைக் கலக்கித் தண்ணீரைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது. உள்ளம் தூய நிலையை அடைந்து தரும வாழ்க்கையைப் பின்பற்ற விரும்பினால், பக்தியை உறுதியாகக் கொண்டு, எளிய தியானம், உபாசனை சாஸ்திரப் பிரவசனத்திலும், மீமாம்சங்களிலும், சமய தத்துவவாதங்களிலும் ஈடுபட்டு மூளையைக் குழப்பிக்கொள்ளவேண்டாம். நம்முடைய சிற்றிவு சிறு குட்டைத் தண்ணீரைப் போன்றது ரொம்பக் கலக்கினால், சேறுதான் மேலேவரும்.

தயிருக்குள் வெண்ணெய் உண்டு என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் தயிரைக் கடைந்தால்தான் வெண்ணெய் மேலே வருமே ஒழிய தயிரில் வெண்ணெய் இருக்கிறத. எடுத்தால் வெளியே வந்துவிடும் என்ற எவ்வளவு தடவைகள் சொன்னாலும் வெண்ணெய் நமக்குக் கிடைக்காது. பரம்பொருளைக் காண வேண்டுமானால் அப்போது இயல்பாகவே நமக்குப் பக்திமார்க்கம் புலப்படும். தத்துவங்களை மட்டும் பேசி ஆராய்ந்து கொண்டால் புலமையில் முன்னேறலாம். ஆனால் பக்தி மார்க்கம் தெளிவாக முடியாது.

– ராஜாஜி

# எறிபத்த நாயனார்

– மு.சிவராசா–

கருவூர் என்ற நகரில் ஆநிலை என்னும் கோயில் உண்டு. அங்கு எழுந்தருளியுள்ள பெருமானிடம் மாறாத பக்திகொண்டு வாழ்ந்தவர் எறிபத்தர் என்னும் அடியவர். சிவனடியர்களைச் சிவன் எனவே கருதுவதோடு, அவர்களுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால் எவ்வகையிலேனும் அத்துன்பத்தைத் துடைப்பதையே தம் தொண்டாகக் கொண்டிருந்தார்.

ஆநிலைப் பெருமானுக்கு தினமும் பத்திர புட்பங்கள் கொய்து கொடுக்கும் சிவகாமியாண்டார் என்ற வயோதிப அடியவர் ஒருவரும் இருந்தார். ஒரு நாள் சிவகாமியாண்டார் பத்திர புட்பங்கள் நிறைந்த பூக்கூடையை தோளில் சுமந்து கொண்டு கோயில் நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். அச் சமயம் அவ்வூர் அரசரான புகழ்ச் சோழருடைய பட்டத்து யானையை பாகர்கள் குளிப்பாட்டியபின் அரண்மனை நோக்கி அவ்வழியால் அழைத்துப் போயினர். யானை சிவகாமியாண்டாரைக் கடந்துபோகும் போது அவர் தோளிலிருந்த பூக்கூடையைப் பறித்து மலர்களையும் இலைகளையும் வீதியில் சிந்திற்று. பாகர்கள் அச்செயலைப் பற்றி அலட்டிக்கொள்ளவில்லை. சிவகாமியாண்டார் தன் இயலாமையை வெளிக்காட்டி கூக்குரலிட்டார். அந்தப் பக்கமாக வந்த எறிபத்தர் விபரத்தைக் கேட்டறிந்து யானையைத் துரத்திச்சென்று அதன் துதிக்கையை மழுவினால் வெட்டினார். யானை விழுந்து இறந்தது. எதிர்த்த பாகலையும் கொன்றார். யானையையும் பாகரையும் யாரோ கொன்று விட்டனர் என்ற செய்தி கேட்ட அரசர் புகழ்ச்சோழர் இது எதிரி அரசர் ஒருவருடைய செயலாக இருக்கலாம் என நினைந்து, யுத்த சன்னத்தராக கொலை நடந்த இடத்துக்கு வந்தார். அது யுத்தகளம் போலன்றி பாகரும் யானையும் கொலையுண்டிருந்ததையும், எறிபத்தர் கையில் மழுவாயுதத்துடன் நிற்பதையும் கண்டார். விபரம் அறிந்த அரசர் சிவபக்தி நிறைந்தவர். யானையம் பாகரும் செய்த பிழைக்கு தாம் தார்மிகப் பொறுப்பு ஏற்றார். அதனால் தம்மையும் கொல்லும்படி தம்து உடைவாளை எறிபத்தரிடத் தந்தார். அரசரின்

36ம் பக்கம் பார்க்க

கலசம் இந்தப் புலம் பெயர் நாட்டில் வாழும் சைவமக்களுக்குச் செய்து வரும் அளப்பரிய சேவைகளுக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்!

டாக்டர் வீ. பழனிவேல்

F.D.S.R.C.S(Eng) (பல்வைத்தியர்)

127 Green Gate Street, London E 13 OBG

Tel: 0208 472 9429

# TAMIL SIDDHARS AND ALCHEMY

**by Joseph Caezza**

*[Joseph Caezza has been a student of Yogi Ramaiah since 1986. He is a member of the Philosophers of Nature and Arizona Babaji Yoga Sangam, USA.]*

In the hungered New Age frenzy where the practice and principles of Ayurveda, traditional Hindu medicine, have become so well known, the West still remains largely ignorant of the South Indian Tamil Siddhar tradition. It represents a wonderful parallel to that of the Rosicrucian Alchemists. Just as the Rosicrucians claim lineage to the high culture of Ancient Egypt, itself only an artifact of "Atlantis", so too do Tamil Siddhars trace their ori inal heritage to an advanced civilization destroyed by a great flood about 10,000 years ago. The lost continent supporting this heritage purportedly stretched from Madagascar to Australia with Sri Lanka constituting its central surviving land mass. Ancient Egyptian High Culture appears suddenly, even from the earliest times at a very advanced level.

Examples of its elegance include high yield strains of grain, a precise calendrical system, refined medicine even featuring neurosurgery, but above all its complete system of hieroglyphic language which seems to serve a higher state of consciousness. These advances emerge suddenly from Neolithic chaos. So too, from earliest recorded history Tamil language appears as one of the most sophisticated literary systems on the face of this planet. This lack of developmental period suggests that both Tamil and Egyptian cultures were surviving artifacts, preserved by the greatest sages of highly advanced civilizations destroyed by geological cataclysm.

The scholar, Kamil Zvelebil, in THE SMILE OF MURUGAN, explains the necessity of understanding the siddhars, the primordial Tamil sages, before any deeper appreciation of South Indian civilization becomes possible. These spiritual giants composed the foundations of literary and scientific development. Yet because they wrote in obscure style soreminiscent of western alchemy and often ridiculed the orthodox caste system with its over-emphasis on ritual worship, the Siddhars have always moved on the outer perimeter of social acceptability. Their chief artifacts, aside from a complete medical system, include a vast body of esoteric literature as well as ever popular rustic poems and bardic songs.

Zvelebil outlines the common features of siddhar poetry: "a protest, Sometimes expressed in very strong terms, against the formalities of life and religion; rough handling of priests and Brahmins in general ; denial of the religious practices and beliefs of Brahmanism, and not only that; an opposition against the generally accepted pan Indian social doctrine and religious practice; protest against the abuses of temple rule; emphasis on the purity of character; claims made by the authors of these poems that they have achieved certain psychokinetic powers and other capabilities which belong to the sphere of para-psychological phenomena; use of imaginative and ambiguous language, rather puzzling though strongly colloquial; no systemic doctrinal exposition. Finally, all these poems are ascribed to a body of sages known as the siddhars (1)."

Does this description recall the mood of the Rosicrucian manifestoes and the

Alchemical literature of 17th century Europe during the age of Reformation against the corruption in the Roman Catholic Church?

The Siddhars present themselves as the greatest masters of yoga, medicine and alchemy. Unlike their western counterparts who emphasized the transmutation of base metal into gold, the Tamil sages stressed the accomplishment of physical immortality or at least extended longevity as the ultimate token of self-realization. Parallels exist in the western concept of the "glorified body". Just as in the west, these sages left a vast number of inscrutable texts accessible only to initiates.


Patanjali, one of the greatest Tamil siddhars who accomplished himself at Rameswaram, explicated the essentials of mystic discipline, in his well known YOGA SUTRAS. Although postures, breath and contemplative techniques play a major role this tradition also includes the practical science of Nature; Cosmology, Astrology, Herbalism, Chemistry Alchemy and Medicine. While Ayurvedic medicine concerns itself generally with herbs and organic treatments the siddhars add strong emphasis on use of inorganic salts, metals and mineral poisons.

Like the romantic notion of the Rosicrucians the siddhars are bound by an oath of secrecy. They wander anonymously practicing their yogic disciplines, doing service to their fellow men especially as dispensers of potent medicines. In the west sages such as Roger Bacon, Albertus Magnusand, Basil Valantine acquired legendary status as alchemists. So too a Rich tradition venerates the exploits of these Tamil mystics. Eighteen of The siddhars are venerated above others for accomplishing themselves to the highest level of perfection. The historic locations in India where they performed their penance today comprise spiritually charged centers of pilgrimage.

The first and foremost of the siddhars, Agastyar, fits the image of his western counterpart, Toth-Hermes. Considered the founder of Tamil language and grammar, he presided over the first two sangams, ancient Literary academies located on the now submerged continent south of Sri Lanka. He also appears as the primordial giver of arts and sciences. Innumerable Classic works ascribe themselves to his authorship. Contemporary Tamil scholars assert that at least 26 classic authors wrote under this name. Who were they all aspiring to imitate? Folk tales abound in accounts of Agastyar's constant battles with local demons. He pops into the story line of classic epics, the Ramayana and Mahabharata, to bestow blessing and guidance. Tradition has it that Agastyar still lives in the Pothigai Hills below the Western Ghats, occasionally appearing to the sincere aspirant (2).

Thirumoolar, another of the most renowned Tamil masters, accomplished his magnum opus of yogic reintegration at Chidambaram, the sacred spot where Shiva performs his cosmic dance. The chief contribution of Thirmoolar, the THIRMANDIRAM, an esoteric masterpiece of 3000 verses explains man's yogic path to immortal divinity, referring metaphorically to the philosopher's stone that transmutes base metal into gold. Here is the essential classic text of siddhar wisdom. Only in the recent past has this work been made available to the English reading public.


To be continued...





# சிறுவர் கலசம்

## DURGA - THE SLAYER OF MAHISHA

continued from last Issue....




O DEVI, YOU ARE THE ORIGIN OF ALL THE WORLDS. YOU ARE DURGA. YOU ARE THE INNER FORCE, THE SOURCE OF ALL STRENGTH. DESTROY MAHISHA AND PROTECT US!
SHIVA DREW FORTH A TRIDENT FROM HIS OWN TRIDENT...
...AND OFFERED IT TO DURGA.
VISHNU AND OTHER DEVAS, TOO, OFFERED WEAPONS TO DURGA.
O DEVI, ACCEPT THIS DISCUS.
— AND THIS THUNDERBOLT.


ARMED WITH THE CELESTIAL WEAPONS AND MOUNTED ON A LION, DURGA EMITTED A BLOOD-CURDLING ROAR.
I'LL SEEK OUT AND DESTROY THE EVIL MAHISHA.
THE SEAS TREMBLED...
...THE EARTH SHOOK AND THE MOUNTAINS ROCKED.
MAHISHA'S HEART MISSED A BEAT.
WHAT'S THAT ?



HE RUSHED OUT OF HIS PALACE TO FIND OUT.
HO! A MERE FEMALE!


NO! I AM NO MERE FEMALE! I HAVE COME TO FULFIL BRAHMA'S BOON. YOU WANTED TO DIE AT THE HANDS OF A WOMAN, DIDN'T YOU?


MAHISHA HASTILY STEPPED BACK AND CALLED TO HIS MEN.
GET HER! KILL HER!

# The Blind Children and the Elephant

In a town there was a school for blind children. Teaching blind children was difficult. They are unable to see things. So they do not have any proper idea about most things. They have to use their imagination to understand things.



One day the teacher was telling them a story about an elephant. The children asked, "Sir, what is an elephant?" The teacher said "I cannot describe to you what an elephant is. But I shall take you to an elephant. You can touch it and understand what it is." The children were all happy. They could, by personal touch, know what an elephant is.

The teacher took the children to the Manager of a circus nearby. He told the Manager "Sir, these children are blind. They want to know what an elephant is. Can you please permit them to touch a real elephant?" The manager looked at the blind children. He was moved with pity. He called one of his assistants. He told him "Take these children to our elephant".

The assistant led the teacher and the students to a tree to which the elephant named Raja was tied. He asked the elephant-keeper to allow the children to touch the elephant safely. So each student was permitted to touch the elephant. All of them surrounded the animal. One of the boys moved his moved his hands over the large ear of the elephant. He caressed the ear with his hand and thought to himself "The elephant is like a fan". Another boy held a leg of the elephant with both his hands. He decided "The elephant is like a big pillar." A third student touched the trunk of the elephant. He understood the elephant is like a thick club. Another touched the stomach of the elephant. He concluded that an elephant is like a huge jar! Everyone was delighted. All of them returned with their teacher to the circus

manager to thank him.

The Manager asked them "So, all of you have touched the elephant. Tell me, what is the animal like?" Each boy began to say what he felt. The first blind boy said "Sir, the elephant is like a huge fan". But the second boy interrupted. "No, no, you have not understood properly. The elephant is like a big pillar similar to the one we have in the school"

The third boy laughed and said "What fools you are! The elephant is neither a fan nor a pillar. It is like the big club we have in our gymnasium". The fourth boy now intervened. He told the Manager "Sir, none of these has felt the elephant properly. I will tell you what it looks like. It is like a huge jar, is it not, sir?"

The discussion became warm. The students began to quarrel among themselves. The manager smiled and asked them to stop the discussion. "I will tell you what the elephant looks like. Each one of you is right and all of you are wrong. Each of you has touched one part of the elephant. From that knowledge you have tried to describe the whole elephant. This is not correct. The elephant is like a fan, like a pillar, like a club and like a jar. But it is something much more than all of these. Only if you see the elephant as a whole can you know what it is. So, don't quarrel with one another."

